# செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண்.17/2022** **நாள் : 20.05.2022**

**சென்னைக் குடிநீர் வாரியத்தின் சார்பில்**
**மாதவரம் பால் பண்ணை சாலையில்**
**மெட்ரோ இரயில் நிலையப் பணிகளுக்காக**
**பிரதான குழாய்கள் மாற்றி இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளதால்**
**23.05.2022 அன்று காலை 8.00 மணி முதல்**
**24.05.2022 காலை 04.00 மணி வரை**
**பகுதி-3, பகுதி-4 மற்றும் பகுதி-6-க்கு உட்பட்ட பகுதிகளில்**
**குடிநீர் விநியோகம் நிறுத்தம்**

**சென்னைக் குடிநீர் வாரியம் தகவல்**

சென்னைக் குடிநீர் வாரியத்தின் சார்பில், மாதவரம் பால் பண்ணை சாலையில் மெட்ரோ இரயில் நிலையப் பணிகளுக்காக புழல் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து செல்லும் பிரதான குழாய்கள் மாற்றி இணைக்கும் பணிகள் 23.05.2022 அன்று காலை 8.00 மணி முதல் 24.05.2022 காலை 04.00 மணி வரை மேற்கொள்ளப்படவுள்ளதால், கீழ்கண்ட பகுதிகளான பகுதி-3-க்குட்பட்ட விநாயகபுரம், பொன்னியம்மன்மேடு, பகுதி-4, கொடுங்கையூர், எருக்கஞ்சேரி, பெரம்பூர்(பகுதி), வியாசர்பாடி, பட்டேல் நகர், புதுவண்ணாரப்பேட்டை, பழைய வண்ணாரப்பேட்டை, கொருக்குப்பேட்டை மற்றும் பகுதி-6, பெரம்பூர்(பகுதி) மற்றும் புளியந்தோப்பு(பகுதி) உள்ளிட்ட பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது. இப்பணிகள் குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கப்பட்டு 24.05.2022 அன்று மாலை முதல் மேற்குறிப்பிட்ட பகுதிகளுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்யப்படும்.

மேலும், பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். அவசர தேவைகளுக்கு லாரிகள் மூலம் குடிநீர் பெற்றுக்கொள்ள கீழ்க்காணும் அலுவலர்களை தொடர்பு கொள்ளவும்.

| | |
|---|---|
| பகுதிப் பொறியாளர்-3<br>கைபேசி எண்.8144930903 | மாதவரம் பகுதிக்குட்பட்ட விநாயகபுரம்,<br>பொன்னியம்மன்மேடு, |
| பகுதிப் பொறியாளர்-4<br>கைபேசி எண்.8144930904 | கொடுங்கையூர், எருக்கஞ்சேரி, பெரம்பூர்(பகுதி), வியாசர்பாடி, பட்டேல் நகர், புதுவண்ணாரப்பேட்டை, பழைய வண்ணாரப்பேட்டை, கொருக்குப்பேட்டை |
| பகுதிப் பொறியாளர்-6<br>கைபேசி எண்.8144930906 | பெரம்பூர்(பகுதி) மற்றும் புளியந்தோப்பு(பகுதி) |

செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர் வாரியம்